## ANNUAL EXAMINATION
## TAMIL

**வகுப்பு** : 9 **மொத்தமதிப்பெண்**:80

**நாள்**: **காலம்** :3மணிநேரம்

**GENERAL INSTRUCTIONS:**

**Read the following instructions carefully.**

**1. SECTION A – I-Reading comprehension & Grammar 1 Marks questions - questions carrying 1 marks each.**

**2. SECTION B - Literature – HOTs question & Non – details questions carries 20 marks. Letter writing**

**3. All questions are compulsory.**

---

**பகுதி அ.** **(40 மதிப்பெண்கள்)**

1. ***அ. பின்வரும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.*** **(5×1=5)**

*நவமணிகளில் ஒன்றாகிய முத்து ஆளி எனப்படும் உயிரினத்தின் சிப்பியினுள் பிறக்கிறது. சிப்பியினுள் சிறு மணலோ, சிறுபுழுவோ புகுந்துவிட்டால் ஆளிக்கு உறுத்தல் ஏற்படும். அந்தப் பொருளால் தீங்கு உண்டாகாதவாறு ஆளி தன் திசுக்களில் இருந்து ஒருவகை நீரைச் சுரக்கிறது. இச்சுரப்பு நீர் அப்பொருளைச் சுற்றி அடுக்கடுக்காகப் படிகின்றது. அதுவே முத்தாகிறது. வெள்ளை, இளஞ்சிவப்பு, நீலம், கருப்பு ஆகிய நிறங்களில் முத்துக்கள் கிடைக்கின்றன. வெண்மையாகவும் உருண்டையாகவும் உள்ள முத்துக்களே சிறந்தவை. கருப்பு நிற முத்து கிடைப்பது மிகவும் அரிது. அதனால் இதன் விலை அதிகம். கடலில் மூழ்கி முத்தெடுக்கும் தொழில் முத்துக்குளித்தல் எனப்படும். தூத்துக்குடியின் அடுத்த கடலில் குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு ஒரு முறை முத்துக் குளிக்கப்படுகிறது. இந்த உரிமை அரசாங்கத்திற்கு மட்டுமே உண்டு.*

***வினாக்கள்.***

1.*முத்து எந்த உயிரினத்திலிருந்து பிறக்கிறது?*

*அ. மீன் ஆ. இறால் இ.ஆளி ஈ.டால்பின்*

2. *கிடைப்பதற்கரிய முத்து எது?*

*அ. கருப்பு ஆ. வெள்ளை இ. நீலம் ஈ. பச்சை*

3. *கடலில் மூழ்கி முத்தெடுப்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?*

*அ. முத்தெடுத்தல் ஆ. முத்துக் குளித்தல் இ. முத்தரித்தல் இ. முத்து*

4. *எப்பகுதியில் முத்துக்குளித்தல் நடைபெறுகிறது?*

*அ. திருச்செந்தூர் ஆ. திருநெல்வேலி இ. தூத்துக்குடி ஈ. வேதாரண்யம்*

5. *முத்துக்குளிக்கும் உரிமை யாருக்கு உரியது?*

*அ. அரசாங்கத்திற்கு ஆ. தனியாருக்கு இ. தனிமனிதனுக்கு ஈ. தொழில்முனைவோருக்கு*

**ஆ. பின்வரும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக. (5×1=5)**

மெழுகுவர்த்திகளின் வரலாறு 2,000 ஆண்டுகள் பழமையானது. ஆரம்ப காலத்தில் பருத்தி மற்றும் சணல் இழைகளை மிருகக் கொழுப்பில் முக்கி மெழுகுவர்த்தியாய்ப் பயன்படுத்தினார்கள். இது விலை அதிகமுடையதாக இருந்தது. இப்போதுள்ள வார்ப்பு முறையில் மெழுகு தயாரிக்கும் வழிமுறை 17ஆம் நூற்றாண்டில் அறிமுகமானது. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சூயர்லா பிரெஷ்

என்பவர் வார்ப்புகளில் விலங்குக் கொழுப்பை ஊற்றி மெழுகுவர்த்தி உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தார். ஆரம்பத்தில் திரிகளை அடிக்கடி ஒழுங்கு செய்துதான் மெழுகுவர்த்தி எரிக்க வேண்டியிருந்தது. பாரிஸைச் சேர்ந்த ஜாக்குவிஸ் காம்பாசெரஸ் என்பவர் 1824 பின்னல் போட்ட திரியை உருவாக்கி மெழுகுவர்த்தியில் பயன்படுத்தினார். மிருகங்களின் கொழுப்புக்கு பதில் மெழுகுவர்த்தி பயன்படுத்தும் முறை 19ஆம் நூற்றாண்டில்தான் அறிமுகமானது. ஸ்காட்லாந்து ஜேம்ஸ் எங் 1850 இல் நிலக்கரியில் இருந்து பாரபின் மெழுகை உருவாக்கிச் சாதனை படைத்தார்.

**வினாக்கள்.**

1.மெழுகுவர்த்தியின் வரலாறு எத்தனை ஆண்டுகள் பழமையானது?

அ. 2000 ஆண்டுகள் ஆ. 2020 ஆண்டுகள் இ. 2500 ஆண்டுகள் ஈ. 1500 ஆண்டுகள்

2. ஆரம்ப காலத்தில் மெழுகு எதில் இருந்து பெறப்பட்டது?

அ. சணல் இழை ஆ. பருத்தி இ. பெட்ரோலில் ஈ. விலங்குக் கொழுப்பில்

3. பின்னல் போட்ட திரி எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?

அ. 1825 ஆ. 1924 இ. 1824 ஈ. 1925

4. விலங்குக் கொழுப்பை வார்ப்புகளில் ஊற்றி மெழுகுவர்த்தி உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்?

அ. ஜாக்குவிஸ் காம்பாசெரஸ் ஆ. ஜேம்ஸ் இ. சூயர் லாபிரெஷ் ஈ. பிராங்லஸ்

5. மிருகங்களின் கொழுப்புக்கு பதில் மெழுகு பயன்படுத்தும் முறை எந்த நூற்றாண்டில் அறிமுகமானது?

அ. 19 ஆம் நூற்றாண்டில் ஆ. 16.ஆம் நூற்றாண்டில் இ. 9 ஆம் நூற்றாண்டில் ஈ. 20 ஆம் நூற்றாண்டில்

**2. அ.பின்வரும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக. (5×1=5)**

பூமியின் காலநிலையில் ஏற்படக்கூடிய மாற்றம் உயிரினங்களின் வாழ்வில் பெரிய அளவிலான பாதிப்பை ஏற்படுத்தும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். தாவரங்கள், விலங்குகள் உள்பட ஆறில் ஓர் உயிரினத்தின் வாழ்வில் காலநிலை மாற்றமானது அதீத பாதிப்பை ஏற்படுத்துவதாக விஞ்ஞானிகள் வெளியிட்ட ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்தை
அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின்போது, தற்போதுள்ள வெப்ப நிலையானது மேலும் 4 டிகிரி செல்சியஸ் அளவிற்கு அதிகரித்தால் கூட உலகில் 16 சதவீத உயிரினங்கள் அழிந்து போகும் என தெரியவந்துள்ளது. கனடா பல்கலைக்கழகத்தை சேர்ந்த டாக்டர் மாஸ்க் ஏர்பன் என்பவர் காலநிலை மாற்றத்தால் அழிவை எதிர்நோக்கியுள்ள உயிரினங்கள் தொடர்பான 131 ஆய்வுகளின் தகவல்களையும் பகுப்பாய்வு செய்து இம்முடிவை வெளியிடப்பட்டதாக கூறியுள்ளார்.

**வினாக்கள்**

1.உயிரினங்களின் வாழ்வில் அதிக அளவிலான பாதிப்பை ஏற்படுத்துவது எது?

அ. புயல் ஆ. பூகம்பம் இ. காலநிலை மாற்றம் ஈ. வெப்பம்

2. வெப்பநிலை அதிகரிக்க உயிரினங்களில் எத்தனை சதவீதம் அழிந்து போகும்?

அ. 16% ஆ .10% இ.6 % ஈ.18%

3. டாக்டர் மார்க் ஏர்பன் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

அ. ஆஸ்திரேலியா ஆ. நியூசிலாந்து இ. தென் அமெரிக்கா ஈ.கனடா

4. டாக்டர் மார்க் எத்தனை ஆய்வுகளின் தகவல்களை பகுப்பாய்வு செய்தார்?

அ. 121 ஆ. 132 இ. 131 ஈ. 111

5. காலநிலை மாற்றத்தால் அழிவை எதிர்நோக்கி உள்ள உயிரினங்கள் தொடர்பான ஆய்வினை பகுப்பாய்வு செய்தவர் யார்?

அ. மார்க் ஏர்பன் ஆ. நிக்கோலஸ் இ. லூதர் ஈ. மார்சிங்

**ஆ. பின்வரும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக. (5×1=5)**

யானைகள் தங்கள் தும்பிக்கையைக் கொண்டு மோப்பம் பிடிக்கவும், சுவாசிக்கவும், பிளிறிச் சத்தமிடவும் பயன்படுத்துகின்றன. எதிரிகளால் ஆபத்து வரும்போது யானை தனது தும்பிக்கையை உயர்த்தி தனது தலைக்கு மேல் வைத்துக் கொண்டு பிளிறும். அப்போது அது வெளிப்படுத்தும் சத்தம் எதிரியை நிலைகுலையச் செய்யும். மேலும் உயர்த்திய தும்பிக்கையைப் பயன்படுத்தி எதிரியைத் தாக்கவும் செய்யும்.

யானைகள் தங்கள் தும்பிக்கை மூலம் தங்களது கூட்டத்தைச் சேர்ந்த மற்ற யானைகளுக்குத் தகவல் பரிமாற்றம் செய்கின்றன. சண்டையிடும்போது பலம்வாய்ந்த யானை தனது தும்பிக்கையால் இன்னொரு யானையை இழுத்துத் தள்ளிவிடும். இதன் மூலம் தனது பலத்தை நிரூபிக்கின்றன. கடினமான பொருளை பிடித்து இழுத்துச் செல்லவும் தும்பிக்கையில் தண்ணீர் நிரப்பி அதைப் பன்னீர் தெளிப்பது போல தெளிக்கவும் யானைகள் பயன்படுத்துகின்றன.

**வினாக்கள்**

1.யானைகள் எப்படி மோப்பம் பிடிக்கின்றன?

அ. தும்பிக்கையால் ஆ. மூக்கினால் இ. காதினால் ஈ. தந்தத்தால்

2. யானைகள் ஆபத்து நேரும்போது என்ன செய்யும்?

அ. வேகமாக ஓடிவிடும் ஆ. பிளிறும் இ. பயந்து நடுங்கும் ஈ. அமைதியாக இருக்கும்

3. யானைகள் எவ்வாறு பிற யானைகளுக்குத் தகவல் பரிமாற்றம் செய்கின்றன?

அ. பிளிறுவதன் மூலம் ஆ. சண்டையிட்டு இ. தும்பிக்கையினால் ஈ. கண்களினால்

4. யானைகள் தும்பிக்கையில் தண்ணீரை நிரப்பி எவ்வாறு தெளிக்கின்றன?

அ. தண்ணீர் தெளிப்பதை போல ஆ. மழைத்துளி போல
இ. பன்னீர் தெளிப்பதைப் போல ஈ. சொட்டுச் சொட்டாக

5. யானைகள் தங்கள் பலத்தை எவ்வாறு காட்டுகின்றன?

அ. முட்டிமோதி ஆ. தும்பிக்கையால் இழுத்துத் தள்ளி இ. தந்தத்தால் குத்தி ஈ. காலால் மிதித்து.

**3. சான்று தருக. ( எவையேனும் நான்கனுக்கு மட்டும்)** **(4)**

1. இறந்தகால இடைநிலைகள்

அ. த், ட், ற், இன் ஆ. ப், வ் இ. கிறு, கின்று, ஆநின்று ஈ. ய், வ்

2. வினை + வினை = வினை

அ. கண்டு + பிடி ஆ. ஆற்றல் + இல்லை இ. குடி + காத்தல் ஈ. தந்தி+ அடி

3. நான் வந்தேன்.

அ. வினைப் பயனிலை ஆ. தோன்றா எழுவாய் இ. பெயர்ப் பயனிலை ஈ. வினாப் பயனிலை

4. குற்றியலுகரப் புணர்ச்சி

அ. கலையழகு ஆ. வாழையிலை இ. மரக்கிளை ஈ. வயிற்றுவலி

5. உரிச்சொல்

அ. கடிநகர் ஆ. பேராவது இ. வினைகள் ஈ. பாடகர்

**4. கூறியவாறு செய்க. ( எவையேனும் நான்கனுக்கு மட்டும்)** **(4)**

1.நான்காம் வேற்றுமை உருபு சேர்த்து எழுதுக

அ. மெட்டுக்குப் பாட்டு ஆ.கதவைத் திற இ. கருவிழி ஈ. தலையால் வணங்கு

2. தந்தை பாருங்கள் – விளித்தொடராக எழுதுக

அ. அப்பா பாருங்கள் ஆ.பாருங்கள் இ. தந்தையே பாருங்கள் ஈ. தந்தை

3. பாலு கண்ணன் (ஓகார இடைச்சொல் சேர்க்க)

அ. பாலுவும் கண்ணனும் ஆ. பாலுவோ இ. கண்ணனோ ஈ. பாலுவோ கண்ணனோ

4. வனிதா பாடினாள் *(தான் என்னும் இடைச்சொல் சேர்த்து எழுதுக)*

அ. வனிதா ஆ. பாடினாள் இ. வனிதா தான் பாடினாள் ஈ. தான் பாடினாள்

5. பல் பசை (திரிதல் விகாரமாக்குக)

அ. பற்பசை ஆ. பட்பசை இ. பல்பசை ஈ. பல்லின் பசை

**5. இலக்கணக்குறிப்பு தருக. ( எவையேனும் நான்கனுக்கு மட்டும்)** **(4)**

1.தீயெரி

அ. குற்றியலுகரப் புணர்ச்சி ஆ. பண்புப்பெயர் புணர்ச்சி
இ. உயிரீற்றுப் புணர்ச்சி ஈ. மகர ஈற்றுப் புணர்ச்சி

2. மலர்ப்பாதம்
அ. உவமை ஆ. உருவகம் இ. பின்வருநிலை ஈ. வஞ்சப் புகழ்ச்சி அணி

3. படித்தாய்

அ. எழுவாய் ஆ. பெயர் எழுவாய் இ. தோன்றா எழுவாய் ஈ. பெயர்ப் பயனிலை

4. ஊறுகாய்

அ. வினையெச்சம் ஆ. விளித்தொடர் இ. உவமைத்தொகை ஈ. வினைத்தொகை

5. வெல்க! வெல்க!

அ. அடுக்குத்தொடர் ஆ. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ. கட்டளைத் தொடர் ஈ. உணர்ச்சித் தொடர்

**6. கோடிட்ட இடத்தை நிரப்புக. ( அனைத்திற்கும் விடையளி) (4)**

1.பகுபத உறுப்புகள் ________

அ. 5 ஆ. 6 இ. 7 ஈ. 8

2. தோசை வைக்கப்பட்டது _________ தொடர்.

அ. செய்வினைத் தொடர் ஆ. செயப்பாட்டுவினைத் தொடர்
இ. தன்வினைத் தொடர் ஈ. பிறவினைத் தொடர்

3.விகாரப் புணர்ச்சி ____________ வகைப்படும்

அ.மூன்று ஆ. ஆறு இ. எட்டு ஈ. பத்து

4. இடைச்சொற்களே _________ பயன்பாட்டை மிகுதியாக்குகின்றன.

அ. மொழி ஆ. இடைச்சொற்கள் இ. உரிச்சொற்கள் ஈ. பெயர்ச்சொற்கள்

**7. பின்வரும் பாடலைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல்வகை வினாக்களுக்கு உரிய விடை எழுதுக. (5×1=5)**

நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்; உணவெனப்படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே.

**வினாக்கள்**

1. இப்பாடல் இடம் பெற்ற நூல்.

அ. அகநானூறு ஆ. புறநானூறு இ. பழமொழி நானூறு ஈ. முதுமொழி நானூறு

2. இப்பாடலை இயற்றியவர்

அ. கம்பர் ஆ. ஜெயங்கொண்டார் இ. கபிலர் ஈ. குடபுலவியனார்

3. இவ்வுலகில் நிலத்தையும் நீரையும் ஒன்று சேர்த்தவரே

அ. பொருளையும் புகழையும் சேர்த்தவர். ஆ. அருளையும் பொருளையும் சேர்த்தவர்.
இ. உடலையும் உயிரையும் ஒன்று சேர்த்தவர். ஈ. நிலையற்ற புகழைச் சேர்த்தவர்.

4. 'யாக்கை' என்னும் சொல்லின் பொருள்

அ. உயிர் ஆ. புகழ் இ. உடல் ஈ. உறுப்பு

5. உண்டி கொடுத்தவர் எதைக் கொடுத்தவர் ஆவார்?

அ. உணவு ஆ. நீர் இ. உயிர் ஈ. நிலம்

**8. பின்வரும் உரைப் பத்தியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.** **(5×1=5)**

இயற்கை என்பது உயிர்களுக்குக் கிடைத்த பெரும்பேறு.இயற்கையின் கொடைகள் கணக்கிலடங்காதவை. அவற்றை உரிய வகையில் பயன்படுத்தியும் பாதுகாத்தும் அடுத்த தலைமுறையினருக்கு அளிப்பது நமது பொறுப்பு. எனவே நீர் மேலாண்மையின் தேவையை உணர்ந்தே ஆக வேண்டிய காலகட்டம் இது.தமிழக வரலாற்றில் பல நூற்றாண்டுகளுக்கு முன் கரிகாலச் சோழன் கட்டிய கல்லணையே விரிவான பாசனத் திட்டமாய் இருந்துள்ளது. கல்லணையின் நீளம் 1080 அடியாகவும் அகலம் 40 முதல் 60 அடியாகவும் உயரம் 15 முதல் 18 அடியாகவும் இருக்கிறது. அது வலுவான கட்டுமானத் தொழில்நுட்பத்தால் இன்றும் பயன்படுவதோடு நமது வரலாற்றுப் பெருமைக்கும் சான்றாக நிலைத்து நிற்கிறது. தமிழர்கள் தண்ணீரின் தேவையை நன்றாகப் புரிந்து கொண்டு நீர் மேலாண்மையை அறிவியல் முறையில் கட்டமைத்தனர்.

**வினாக்கள்**

1.பல நூற்றாண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட அணை எது?

அ. மேட்டூர் அணை ஆ. கல்லணை இ. மேலணை ஈ. ஆழியாறு அணை

2. கல்லணையைக் கட்டியவர் யார்?

அ. கரிகாலச் சோழன் ஆ. கோப்பெருஞ்சோழன் இ. ராஜராஜ சோழன்
ஈ. குலோத்துங்க சோழன்

3. கல்லணையின் நீளம் எத்தனை அடிகள்?

அ.1020 ஆ. 1040 இ. 1090 ஈ. 1080

4. கல்லணை எதற்குச் சான்றாக நிற்கிறது?

அ. பெருமைக்கு ஆ. வரலாற்றுப் பெருமைக்கு இ. கட்டுமானப் பெருமைக்கு
ஈ. சோழனின் பெருமைக்கு

5. தமிழர்கள் நீர் மேலாண்மையை எந் நோக்கில் கட்டமைத்தனர்?

அ. வரலாற்று ஆ. தேக்கம் இ. அறிவியல் ஈ. பெருமையின்

**9. பின்வரும் குறட்பாக்களின் விடுபட்ட சீர்களை சரியான சீர்களைக் கொண்டு நிரப்புக. (4)**

1.அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை ________பொறுத்தல் தலை.

அ. புகழ்வார் ஆ. இகழ்வார் இ. மகிழ்வார் ஈ. திகழ்வார்

2. தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும் தீரா __________ தரும்.

அ. இடும்பை ஆ. கடம்பை இ. உடும்பை ஈ. இரும்பை

3.செல்வத்துள் செல்வம் ______________ அச்செல்வம் செல்வத்துள் எல்லாந் தலை.

அ. பொருள் செல்வம் ஆ. மழலைச் செல்வம் இ. செவிச்செல்வம் ஈ. கல்விச்செல்வம்

4.செவியிற் சுவையுணரா வாயுணர்வின் _________ அவியினும் வாழினும் என்.

அ. மக்கள் ஆ. மாக்கள் இ. பொருட்கள் ஈ. புற்கள்

**பகுதி _ ஆ (எழுதுதல்) (40 மதிப்பெண்கள்)**

**10. எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளி (2×3=6)**

1.குடும்ப விளக்கு பாடல் குறித்த செய்திகளைத் பாரதிதாசன் வழிநின்று விளக்குக.

2. நிலைத்த புகழைப் பெறுவதற்கு குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

3.'விதைக்காமலே முளைக்கும் விதைகள்' _ இத்தொடரின் வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.

4. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.

**11. எவையேனும் மூன்று உரைநடை வினாக்களுக்கு மட்டும் விடையளி (3×4=12)**

1.நீரும் நீராடலும் தமிழ் மக்களின் வாழ்வியலோடு எவ்வாறு இணைந்து இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

2. அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

3. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

4.பல்லவர் காலச் சிற்பக்கலையை விவரிக்க.

5.ஏறு தழுவுதல் தமிழரின் பண்பாட்டு அடையாளம் என்பதை விளக்குக.


**12. ஏதேனும் ஒரு துணைப்பாட வினாவிற்கு விரிவான விடையளி. (7)**

1.அகழாய்வுகள் மூலம் பண்பாடு காக்கப் படுகிறது என்பதை அகழாய்வுகள் மூலமாக விளக்குக.

2. 'தண்ணீர்க்' கதையை கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

3. நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

**13. பின்வரும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. (3)**



**14. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒரு கடிதம் எழுதுக. (6)**

அ.உங்களின் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

அல்லது

ஆ. உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் _ தமிழ் _ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.
(எக்கடிதமாயினும் உனது முகவரி)
ஆ.முகிலன் / ஆ.யாழினி 15, நல்வாழ்வுக் குடியிருப்பு, அண்ணா நகர் மேற்கு, சென்னை .600040)

**15. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக. (6)**

1.தலைப்பு - குறிப்புச்சட்டகம் - முன்னுரை - ஒழுக்கம் - மாணவர்களின் ஒழுக்க நெறி - ஒழுக்கம் சார்ந்த கல்வி- உயிரினும் மேலானது - பெருமைகளில் பிறப்பிடம் - ஒழுக்கத்தின் பெருமை - முடிவுரை.

2.குறிப்புச் சட்டம் _ முன்னுரை _ சேமிப்பின் தேவை _ பலவகை சேமிப்புத் திட்டங்கள் _ சேமிப்பில் மாணவர் பங்கு _ சேமிப்பின் பயன்கள் _ முடிவுரை.

3. குறிப்பு சட்டகம் _ முன்னுரை_ பிறப்பு _நாட்டுப்பற்று _மொழிப்பற்று_ சமூகப் பற்று _ஒருமைப்பாடு_ புதுமைக் கவிஞர்_ முடிவுரை.